செய்தி வெளியீட்டு எண்.202 நாள்:**4.3.2010**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் துறைக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்**

தமிழக அரசால் அறிவிக்கப்படுகின்ற பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடவும், அத்திட்டங்களின் பலன் கடைக்கோடி மக்களுக்கு சென்றடைந்திடவும் அரசு இயந்திரத்தின் நிர்வாகத் திறனை மேம்படுத்திடவும் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் அரசுப் பணிகளில் தேவையான அளவு புதிய பதவிகளை ஏற்படுத்துவதிலும், ஏற்கனவே உள்ள பதவிகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதிலும் கலைஞர் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

கடந்த அ.தி.மு.க. அரசின் பணிநியமன தடைச்சட்டத்தை கலைஞர் தலைமையிலான அரசு 2006—ல் பதவியேற்றவுடன் விலக்கிக் கொண்டதன் பலனாக இதுவரை 3,40,078 நபர்களுக்கு பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், 84,407 பேர்கள் வேலை வாய்ப்பகங்கள் மூலமாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் மட்டும் 23,468 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் 479 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று (4.3.2010) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரக்கோணம் எஃகு தொழிற்சாலையில் பணியாற்றி பணியிழந்த 52 நபர்களுக்கு கருணை அடிப்படையிலும், தொழிலாளர் நலத்துறையில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகள் 12 நபர்களுக்கும், மாதம் ரூ. 2000 என தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து முறையான சம்பள விகிதத்தில் நியமனம் செய்யப்பட்ட பணிமனை உதவியாளர்கள் 73 நபர்களுக்கும், தொழிற்சாலைகள் துறையில் உதவி தொழிற்சாலை ஆய்வாளர்களாக நியமனம் பெறும் 13 நபர்களுக்கும், தொழிலாளர் நலத்துறையில் மொத்தம் 150 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், முதன்மை செயலாளர் டாக்டர்.டி.பிரபாகரராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அணையர் திரு.ஆ.சு.ஜீவரத்தினம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.